# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

## SMIB இல் வேலை வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, உயர் தரமான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பரந்த வகையில் டிஜிட்டல் சேவைகளை வழங்கும் நோக்குடன் வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் உள்ளது. அதற்காக பின்வரும் பதவிக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதற்கு முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து நாம் விண்ணப்பங்களை கோருகிறோம்.

**கிளை முகாமையாளர் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்)**

**முக்கிய பொறுப்புகள்**

தயாரிப்பு விற்பனை, இலாபம் மற்றும் வாடிக்கையாளர் ஈர்ப்பு ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் கிளையை வழிநடத்துதல், உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி கிளைச் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்தல் மற்றும் வங்கியின் வணிக இலக்குகளை நோக்கிப் பணியாற்ற ஊழியர்களை ஊக்குவித்தல்.

**தகைமைகள்**

ப.மா.ஆ. அங்கீகரித்த வங்கி, வர்த்தக நிர்வாகம், வணிகம் அல்லது பொருளியல், கணக்கியல் அல்லது அதற்கு இணையான துறையில் பட்டம் ஒன்று அத்துடன் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலை அல்லது உரிமம் பெறும் பரீட்சை அல்லது ஐ.இ. இன் முகாமைத்துவ கணக்காளர் பட்டய நிறுவனத்தின் (CIMA UK) கட்டம் I மற்றும் II பரீட்சை அல்லது IBSL இணை அங்கத்துவம்.

**அனுபவம்**

வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றில் கிளை கடன் மதிப்பீடு, கடன் வழங்கல், இடர் செயல்பாடுகள் மற்றும் கடன் மீட்புப் பணிகள் துறையில் நிறைவேற்றுனர் ஒருவராக ஒட்டுமொத்தமாக 06 ஆண்டுகள் அனுபவம் அதில் குறைந்தது நான்கு (04) ஆண்டுகள் உதவி முகாமையாளர் ஒருவராக தகைமைக்கு பின்னராக அனுபவம் இருத்தல் வேண்டும். அபேட்சகர் சிறந்த தொடர்பாடல் மற்றும் ஆளிடை திறன்கள் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

சம்பள அளவு - வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதம் ஒன்றுக்கு ரூபா 135,125 - 2,650 x 20 -188,125 (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு). தோராயமாக மொத்த மாதாந்த சம்பளம் ரூபா 248, 500.00

**வயது –** 40 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் அரச துறை நிறுவனம் ஒன்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது எல்லை பொருந்தாது)

**பொது நிபந்தனைகள்**

தேர்வு முறை – வங்கியின் ஆட்சேர்ப்புக் கொள்கை மற்றும் நடைமுறையின்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தேர்வு இடம்பெறும்.

**விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி** - 2026.06.15

**விண்ணப்பித்தல்**

ஆர்வமுடைய தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் கீழுள்ள மின்னஞ்சல் முகவரி வழியே உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு இலக்கங்களுடன் தமது கல்வி/ தொழில்முறை விபரங்களின் பிரதிகளை கொண்டதாக தமது சுயவிபரக் கோவையை அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரர்களின் ரகசியம் கண்டிப்புடன் பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகுதி இழப்பாக கருதப்படும். தேர்வு, ஆட்சேர்ப்பை ஒத்திவைப்பது ரத்துச் செய்வது அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகள் மற்றும்/ அல்லது இந்த பெறுகையின் தேர்வு அளவுகோலை மாற்றும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர்கள் சபையின் முடிவு இறுதியானதும் மற்றும் முடிவானதுமாகும்.

விண்ணப்பங்களை careers@smib.lk என்ற முகவரி ஊடாக மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.